
'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVII ஜூலை கி.பி. 2026 சான்று : 199



# புதிய பணியாளர்கள் பயிற்சி


அமைதியகம்


பட்டுக்கோட்டை


அருள்சான்று நிலையம்


ஆர்.எஸ் மங்கலம்


அருள்சான்று நிலையம்


மன்னார்குடி


பூதலூர்


நமணசமுத்திரம்


சிவகங்கை


தஞ்சாவூர்


காளையார்கோவில்


புதுக்கோட்டை

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்பட தகுதி உள்ளவர் அல்ல (லூக் 9:62) என்று இயேசு கிறிஸ்து ஆண்டவர் உறுதிப்படக் கூறியுள்ளார். இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்பு பெறுவர்(மாற் 13 :13) என்றும் மிகத் தெளிவாக உறுதிபட எடுத்தியம்பியிருக்கிறார். எனவே நானும் நீங்களும் இப்பணியாளர் வாழ்வில், அர்ப்பண வாழ்வில் இறுதிவரை மன உறுதியுடன் நிலைத்திருக்க வாழ்த்துகிறேன் செபிக்கிறேன்.

இவ்விதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இதுவரை எட்டு வட்டாரங்களில், நம் தன்னார்வ நற்செய்தி பணியாளர்களுக்கான சீராய்வு தியானக் கூட்டம் நிறைவு பெற்றிருக்கிறது. அதில் மிகுந்த ஆர்வம் காட்டிய அத்தனை பணியாளர்களையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். உங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பித்துக் கொண்டதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். தொடர்ந்து அனைத்து வட்டாரங்களிலும் இந்நிகழ்வு நடந்தேற இருக்கிறது. ஒவ்வொன்றிலும் தங்களை உரிய முறையில் தயாரித்து தவறாமல் அந்த சீராய்வு வட்டார கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். தவிர்க்க இயலாத நிலையில் அன்றைய நாளில் கலந்து கொள்ள முடியாதவர்கள், அடுத்த வட்டாரங்களில் நடக்கும் கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். தவிர்க்க முடியாத காரணமின்றி யாரும் தவிர்ப்புப் பெறக்கூடாது. அனைத்து வட்டாரங்களிலும் சீராய்வு முடிந்த பிறகு யாருக்கும் வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. எனவே அவரவர் வட்டாரங்களில் கலந்துகொள்ள முழு முயற்சி எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சீராய்வு தியானத்தில் கலந்துகொண்டு மறு அர்ப்பண உறுதி ஏற்பவர்கள் மட்டுமே தொடர்ந்து தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களாகத் தொடர முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பல மாதங்களாக இதற்கான விழிப்புணர்வு உங்களுக்கு வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

சென்ற இதழ்களில் 'அர்ப்பணம்' என்ற தலைப்பில் திருவிவிலிய மாந்தர்களான ஆபிரகாம் மற்றும் அன்னை மரியாளின் அர்ப்பணம் வாழ்வு பற்றி இரத்தினச் சுருக்கமாக ஆய்ந்து அறிந்து கொண்டோம். தொடர்ந்து பேதுரு மற்றும் அந்திரேயாவின் அர்ப்பணம் பற்றிச் சிறிதளவு சிந்திப்போம்.

**பேதுருவும் அந்திரேயாவும்:** மீனவர்களான பேதுருவும் அந்திரேயாவும் கடலில் வலை வீசிக் கொண்டிருந்தனர். திருவிவிலியத்தில் பார்க்கும்போது கடவுள் அழைத்தவர்கள் எல்லாம் தங்கள் பணிகளைச் சுறுசுறுப்பாக செய்து கொண்டிருந்தவர்கள்தான் .அவர்கள் சுறுசுறுப்புடன் பணி செய்து கொண்டிருந்த போதுதான் அழைத்தார்(மத் 4: 18) எந்த சோம்பேறியையும் அழைக்கவில்லை. தங்கள் வேலையை செய்து கொண்டிருந்த அவர்களை பார்த்து இயேசு 'என் பின்னே வாருங்கள். நான் உங்களை மனிதரை பிடிப்பவர் ஆக்குவேன்' (மத் 4: 19) என்று கூறினார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள் (மத் 4: 20) என்று வாசிக்கிறோம். காலம் காலமாய் அவர்கள் செய்து வந்த தொழில் மீன்பிடித்தல். அதுதான் அவர்களின் வாழ்வாதாரம். அவர்கள் பாமரர்கள். அன்றாடம் மீன் பிடித்தால்தான், தாங்களும் தங்கள் குடும்பமும் வாழ முடியும். ஆனால் எதைப் பற்றியும் கவலைப்படாமல், சிந்திக்காமல் 'உடனே' அவர்கள் வலைகளை விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள். அழைத்தவர் யார்? எதற்காக அழைத்தார்? நம்மை கொண்டு என்ன செய்யப் போகிறார்? என்ற எந்த விவரமுமே தெரியாமல் இயேசுவின் பின் சென்றார்கள். முழுமையான அர்ப்பணிப்பு தானே இதற்குக் காரணம்.

பேதுருவின் உடனடி கீழ்ப்படிதல், நம்மை மலைக்க வைக்கிறது. தன்னுடைய, தன் குடும்பத்தின் வாழ்வாதாரமாகிய மீன்பிடி தொழிலை விட்டுவிட்டு ஆண்டவரின் அழைப்பிற்கு கீழ்படிந்தது எண்ணிப் பார்க்க முடியாத நிலை. 'நான் யார்?' என்ற இயேசு ஆண்டவரின் கேள்விக்கு சிறிதும் தாமதமின்றி 'நீர் மெசியா. வாழும் கடவுளின் மகன்' (மத் 16: 15 ,16 )என்று சற்றும் சிந்திக்காமல் சரியான பதிலை தந்தார். தோல்விக்கு பிறகும், அதாவது மூன்று முறை இயேசுவை மறுதலித்திருந்தாலும் (லூக் 22:54-62) மனம் நொந்து அழுது மனம் திரும்பி, மீண்டும் ஆண்டவரிடம் திரும்பினார். உண்மையான அர்ப்பணிப்பு என்பது ஒருபோதும் தவறாமல் இருப்பது அல்ல. தவறினாலும், நிலைத்திருக்க திணறினாலும் மீண்டும் எழுந்து ஆண்டவரை, அவருடைய பாணியில் பின்பற்றுவது ஆகும்.

உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவர் பேதுருவிடம் மூன்று முறை (யோவா 21:15 -17) 'நீ இவர்களை விட மிகுதியாக என்னிடம் அன்பு கூறுகிறாயா?' என்று கேட்கும் போது அவரது பதிலில், அவர் அன்பினால் ஊக்கம் பெற்றிருக்கிறார், அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். அதுமட்டுமல்ல அந்த அர்ப்பணிப்பு இயேசு ஆண்டவருக்காக இறுதிவரை நிலைத்திருந்து, தன் உயிரையும் கொடுக்கவைத்தது . பெந்தகோஸ்து நாளுக்கு பிறகு பேதுரு மிகுந்த துணிச்சலோடு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்தார். அதன் மூலம் துன்புறுத்தல்களையும் சிறை தண்டனைகளையும் எதிர்கொண்டார். ஆனால் தன் அர்ப்பணிப்பில் இறுதிவரை நிலைத்திருந்தார். இறுதியில் இயேசு கிறிஸ்துவுக்காக தன் உயிரையும் அர்ப்பணித்தார். குறைபாடுகள் இருந்தாலும் கடவுளை முழு மனதோடு நேசித்து, பின்பற்றி அதில் நிலைத்திருக்கிறவர்களை கடவுள் வல்லமையாய் பயன்படுத்துவார். நம் நிலை என்ன?

அந்திரேயாவும் அர்ப்பணிப்பின் உயர் வடிவம். அழைப்பிற்கு உடனே கீழ்படிந்தார், இயேசுவைப் பின் சென்றார் என்று பார்த்தோம். அது மட்டுமல்ல அவர் தன்னை முன்னிலைப்படுத்தாமல் மற்றவர்களை இயேசுவிடம் அழைத்துச் சென்ற பணிவான சேவை புரிந்தவர். இவர் முதலில் திருமுழுக்கு யோவானின் சீடர். அவர் இயேசுவை அறிமுகப்படுத்தியபின் (யோவா 1 :36- 41) 'ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?' என்று கேட்டதற்கு, இயேசு 'வந்து பாருங்கள்' என்றார். இரண்டு சீடர்கள் சென்றார்கள். பார்த்தார்கள். தங்கினார்கள். அதில் ஒருவர் அந்திரேயா. அவர் போய் முதலில் தன் சகோதரரான சீமோனிடம் 'மெசியாவைக் கண்டோம்' என்று கூறி அவரை இயேசுவிடம் அழைத்து வந்தார். அந்திரேயாவின் மிகப்பெரிய அர்ப்பணிப்பு, தானே புகழ் பெறாமல் மற்றவர்களை இயேசுவிடம் அழைத்து சென்றதில்தான் உள்ளது. பேதுருவைத் தலைமை பொறுப்பிற்கு தேர்ந்தெடுத்த போதும் பொறாமையில் புண்படவில்லை. பிறர் உயர்வில் உண்மையான அர்ப்பணிப்பு மகிழும். ஐயாயிரம் பேருக்கு உணவளித்த போது அப்பமும் மீனும் வைத்திருந்த சிறுவனை இயேசுவிடம் அறிமுகப்படுத்தியது அந்திரேயாதான்(யோவா 6: 8-9). சில கிரேக்கர்கள் இயேசுவை சந்திக்க விரும்பிய போது அவர்களை இயேசுவிடம் அழைத்து சென்றவரும் அந்திரேயாதான் (யோவா 12:20-22) இறுதிவரை அசைக்க முடியாத நம்பிக்கையோடு, பல இடங்களில் நற்செய்தி அறிவித்து மறை சாட்சியாக இறந்தார். தன்னை உயர்த்திக் கொள்ளாத அர்ப்பணிப்பு பலரை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டுவரும் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா? நம் நிலை என்ன?

நம்மைப் போன்ற எத்தனையோ மனிதர்கள் கடவுளை விட, இறை வார்த்தைகளை விட, கடவுளின் மதிப்பீடுகளை விட இவ்வுலகில் யாரும், எதுவும் உயர்ந்தது அல்ல என்று வாழ்ந்து நிரூபித்துச் சென்றிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஆண்டவரும் 'தன்னைவிட வேறு எவரையும் வேறு எதையும் மேலாகக் கருதினால் தன் சீடராக இருக்க முடியாது' (லூக் 14:26) என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார். ஆனால் நாம்

இயேசுவை விட பணம் புகழ், பதவி, நல்ல நாள், நேரம் பார்த்தல், ஒன்றுக்கு உதவாத மூடநம்பிக்கைகள் போன்ற இவ்வுலக மதிப்பீடுகளை உயர்வாக மதிக்கிறோம். தன் சிலுவையை சுமக்காமல் என் பின் வருபவர் எனக்கு சீடராய் இருக்க முடியாது என்று இன்னும் உறுதிப்பட (லூக் 14:27)ஆண்டவர் கூறியிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்பில் நிலைத்திருக்க ஒருவர் மற்றவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்.

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## ஜூன் 2026 புதிய பணியாளர்கள் பயிற்சி

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 07.06.2026அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 5 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி A. அடைக்கலம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 07.06.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 16 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G. பிரான்சிஸ் சேவியர், நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி A. ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 13.06.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 13 பேர் இரண்டாவது குழுவில் 15 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஓரோக்கியமேரி, நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிவில் 14.06.2026 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 14.06.2025அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 15 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி M. சகாயமேரி, நற்பணி I. ஜோசப் இருதயம், நற்பணி G. பிரான்சிஸ் சேவியர். நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 14.06.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 4 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி இரா, அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 21.06.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 9 பேரும் இரண்டாவது குழுவில் 14 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி S. பால்ராஜ், நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி தை. அமல்ராஜ், சகோதரி. சவரியம்மாள் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 21.06.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 6 பேரும் இரண்டாவது குழுவில் 14 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சிகளை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி G.M.S. ராணி, நற்பணி T. ஸ்டீபன், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X சி.கே. மங்கலம், புனித பேதுரு ஆலயத்தில் 21.06.2026 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை இப்பயிற்சியை நற்பணி A. தமிழ் செல்வி, நற்பணி X. சகாய லூயி, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

★சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 28.06.2026 அன்று நடைபெற்றது. முதல் குழுவில் 4 பேரும் இரண்டாவது குழுவில் 2 பேரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சிகளை நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியமேரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

ஜூன் 2026

## கடந்த மாதச் செயல்பாடுகள்

✸03.06. 2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 32 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி A.R. சூசைராஜ். நற்பணி எலிசபெத் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸03.06.2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 65 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி. பாத்திமா ராணி, நற்பணி ஜான்சி, நற்பணி அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸07.06.2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி L. ஆரோக்கியசாமி, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸07.06.2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி தை. அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸13.06.2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி தை. அமல்ராஜ், நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸14.06.2026 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸14.06.2026 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸20.06.2026 அன்று மங்களபுரம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி. S. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸21.06. 2026 அன்று தஞ்சாவூர், திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி M. லூயிஜான்போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸21.06.2026 அன்று மன்னார்குடி, புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை S. மோட்ச அலங்காரம், நற்பணி S. இராஜேந்திரன் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸21.06.2026 அன்று அம்மாபேட்டை, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி M. விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸28.06.2026 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய

பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி S. இராஜேந்திரன் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸28.06.2026 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி S. ஹென்றி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸8&9.6.26 ஆகிய தேதிகளில் நற்பணி மரிய நாயகம், கமுதி பங்குப்பாணியாளரோடு இணைந்து பெருமாள் குரும்பன் பட்டியில் சிறப்பு திருமண முறைப்படுத்துதல் பணியை மேற்கொண்டார்.

✸2026 ஜுலை மாதம் இடைக்காட்டூர், மானாமதுரை, புளியால், காளையார்கோவில், இராமேஸ்வரம் , பாம்பன் மற்றும் இராமநாதபுரம் ஆகிய வட்டாரங்களில் சீராய்வு வட்டாரக்கூடுகை ஏற்பாடு செய்யப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் தலைமையில் சென்ற குழுவினர் வட்டாரப் பணியாளர்களை குழுவாகவும் தனியாகவும் சந்தித்து நற்செய்திப் பணியாளராக தொடர விருப்பமுள்ளவர்களின் அர்ப்பணத்தை மீள் உறுதி செய்தனர்.

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



என் பின்னே வாருங்கள்(மத் 4:19) என்று அழைத்தவரே இறைவா! முழு இதயத்தோடு உம்மைத் தேடி உம்மோடு அதிக நேரம் செலவிடவும், (எரே 29:13), உம் வார்த்தைகளை அதிகமாக உட்கொள்ளவும் (மத் 4:4)கவனச் சிதறல் இன்றி மேலுலகு சார்ந்தவை பற்றி எண்ணிடவும் (கொலோ 3:2)வேண்டிய மனநிலை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறேன்.

## ஆண்டுத் தியானம் — 2026

| நாள் | | இடம் | தியான வழிகாட்டி | நெறியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஜுலை 26<br>**10/11/&12** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB | நற்பணி I.புஷ்பராஜ்<br>நற்பணி A.பெமிலா |
| 2. | ஜுலை 26<br>**24/25&26** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Sr. **விமலா** ISONE | நற்பணி V.செங்கோல்மேரி<br>நற்பணி S.இராஜேந்திரன் |
| 3. | அகஸ்டு 26<br>**21/22&23** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Sr. **விமலா** ISONE | நற்பணி G.பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி S.ஆரோக்கியசாமி |
| 4. | செப்டம்பர் 26<br>**11/12/&13** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB | நற்பணி GMS.ராணி<br>நற்பணி S.ஸ்தனிஸ்லாஸ் |
| 5. | அக்டோபர் 26<br>**09/10&11** | அருள்சான்று நிலையம்<br>பரமக்குடி | Fr. **ரூபன்** SDB | நற்பணி M.சேவியர்<br>நற்பணி K.ஜஸ்டின் கபிரியேல் |
| 6. | அக்டோபர் 26<br>**23/24&25** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Sr. **விமலா** ISONE | நற்பணி I.செபஸ்தியான்<br>நற்பணி A.சகாயலூயி |
| 7. | நவம்பர் 26<br>**27/28&29** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB | நற்பணி J.அருள் இளங்கோ<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் |
| 8. | டிசம்பர் 26<br>**04/05&06** | அமல அன்னை<br>அமைதியகம், காயாவயல் | Fr. **ரூபன்** SDB | நற்பணி L.ஆரோக்கியசாமி<br>நற்பணி A.R.சூசைராஜ் |

பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேரூடமை (திப 20:35)

நம் விண்ணகத் தந்தை கொடுப்பதில் தாராள உள்ளம் கொண்டவர். எனவே தான் புனித பவுல் நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுள் என்று அவரைக்குறிப்பிடுகிறார் (எபே 3:20-21). அவர் இந்த உலகைப் படைத்தபோது தான் உண்டாக்கப்போகிற மனிதனுக்கு என்னென்ன வேண்டுமோ, அவற்றை அளவுக்கதிகமாகவேப் படைத்தார். அவற்றில் ஒன்றையும் தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் அனைத்தையும் மனிதனிடம் கொடுத்தார். இதைத் தாவீது மிகவும் உயிர்ப்போடு உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆகும்படி செய்தீர் எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்படித்தியுள்ளீர் என்று குறிப்பிடுகிறார். (திபா 8:3-8). நம் விண்ணகத் தந்தை கொடுப்பதில் நிறைவுள்ளவர். எனவேதான் நம் ஆண்டவர் அடிக்கடி உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பவர்போல நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள் என்றார்.

நம் ஆண்டவர் இயேசுவும் விண்ணகத் தந்தையின் முழு நிறைவையும் சுமந்து கொண்டு இவ்வுலகிற்கு வந்தார் (கொலோ 1:19). அவர் பிறக்கும்போதே எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியூட்டும் செய்தியைக் கொடுத்தார் (லூக் 2:10). அவர் உலகத்தில் வாழ்ந்த போது அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார் (திபா10:38). அவரை நம்பி வந்த ஒருவர்கூட வெறுங்கையராய்த் திரும்பிச் செல்லவில்லை. அனைவருக்கும் தேவைக்கு மிகுதியாகவே நலமானவைகளை எப்போதும் கொடுத்தார். அவரைப்போல அவருக்குப்பின் அவரைப் பின்பற்றுவோரும் தாராளமாக பிறக்கு கொடுக்கக்கூடியர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இந்த அவரது விருப்பம் அவரைப் பின்பற்றிய சீடர்களின் விருப்பமாக மாறியது. கொடையாகப் பெற்றீர்கள். கொடையாகவே வழங்குங்கள் என்று ஆண்டவர் அவர்களுக்குக் கூறியதை நிறைவேற்ற மிகவும் ஆர்வமுள்ளவர்களாய் இருந்தார்கள் (மத் 10:8-9). இந்த ஆர்வத்தோடு பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்றபோது அங்கே பிறவியிலேயே கால் ஊனமுற்று இருந்த ஒரு மனிதரைச் சிலர் சுமந்து கொண்டு வந்தனர் (திப 3:1-2). இது ஏதோ ஒரு நாள் இரண்டு நாள் அல்ல. அந்த மனிதர் நாற்பதுக்கும் மேற்பட்ட வயது உடையவர் (திப4:22). அந்த மனிதரின் நிலையை நாம் சற்று எண்ணிப்பார்ப்போம். அவர்கள் அந்த மனிதனைக் கையைப் பிடித்து அழைத்துவரவில்லை. மாறாக, சிலராகச் சேர்ந்து சுமந்து கொண்டு வந்து கோவிலின் அழகுவாயில் என்னுமிடத்தில் வைப்பார்களாம். அப்படியானால் அவர் ஒரு முறை வரவில்லை. இது ஒரு வழக்கமாக இருந்தது. நாற்பது வயதுவரை இப்படி இருந்ததால் அவரது எழும்புகள் நரம்புகள் எல்லாமே வலுவற்று கூனிக்குறுகிப்போயிருக்கும். இன்றைக்கு உள்ள அறிவியல் அறிவுப்படி எத்தனை திறமை வாய்ந்த மருத்துவக் குழுவினர் இணைந்து அறுவை சிகிச்சை செய்தாலும் அவரைக் குணமாக்குவது அவ்வளவு எளிதல்ல. இப்படிப்பட்ட ஒரு மனிதரைத் தான் பேதுருவும் யோவானும் சந்திக்கின்றனர்.

அந்த கோவிலிற்குள் போகிறவர்களும் வருகிறவர்களும் தங்கள் கையில் கிடைத்தை அவருக்கு கொடுத்தார்கள்.

ஆனால் பேதுருவும் யோவானும் ஆண்டவரிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் (லூக் 9:1). எனவே அவர்கள் பெற்றுக் கொண்டதில் இந்த மனிதருக்கு நாம் சிறப்பானதைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் எழ அவர்கள் அந்த மனிதனை உற்றுப்பார்க்கிறார்கள். பின்பு பேதுரு அந்த மனிதரைப் பார்த்து வெள்ளியும் பொன்னும் என்னிடம் இல்லை. என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசுவின் பெயரால் எழுந்து நடந்திடும் என்று கூறி அவரது வலக்கையைப் பற்றிப்பிடித்து தூக்கிவிட்டார். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவர் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார் (திப 3:1-8). தவளை போல் கிடந்த மனிதர் இப்போது எல்லோர் முன்பாக ஆறு அடி உயரமுள்ள முழு மனிதனாக எழுந்து நிற்கிறார். எருசலேம் நகரமே இதைப்பார்த்து வியப்படைந்தது. பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேருடைமை என்ற ஆண்டவரின் வார்த்தை சீடர்களில் நிறைவேறுகிறது. அந்த மனிதர் நாற்பது ஆண்டுகளாக எத்தனையோ மனிதர்களிடம் உதவி பெற்றிருப்பார். ஆனால் எந்த மனிதராலும் அவரது வாழ்க்கையை மாற்ற முடியவில்லை. நாசரேத்து இயேசுவின் மீது இருந்த நம்பிக்கை அது கடவுளின் வல்லமையாக புறப்பட்டு அந்த மனிதனை நலமாக்கியது. இதைக் கண்ட மக்கள் பேதுருவையும் யோவானையும் சூழ்ந்து கொண்டபோது தாங்கள் எங்கள் சொந்த வல்லமையாலோ இறைப்பற்றாலோ இவரை நடக்கச் செய்துவிட்டதுபோல் ஏன் எங்களையே உற்றுப்பார்க்கிறீர்கள். இயேசுவின் பெயரே இவருக்கு வலுவூட்டியது. அவர் பெயர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால்தான் இது நடந்தது. இந்த நம்பிக்கையே உங்கள் அனைவர் முன்பாகவும் இவருக்கு முழுமையான உடல் நலனைக் கொடுத்துள்ளது என்று எல்லோர் முன்பாகவும் சான்று பகர்ந்தார்கள் (திப 3:12-16). புனித பேதுரு தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டதும் ஆண்டவர் இயேசுவின் பெயரை அதற்குள் மறைந்து கிடந்த இறைவல்லமையை அறிந்து கொண்டது மட்டுமல்ல அந்தப் பெயரின் ஆற்றல் தனக்குள்ளிருந்தும் வெளிப்பட ஆற்றலுள்ளது என்பதை அறிந்து கொண்டார். எனவேதான் வெள்ளியும் பொன்னையும் விட விலையேறப் பெற்ற ஒன்று என்னிடம் உள்ளது, அதை நான் உனக்குத் தருகிறேன் என்றார். இதைத்தான் புனித பவுல் நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுள் என்று குறிப்பிடுகிறார். எனவே இன்னும் வெளி அடையாளங்களைத் தேடி அலையாமல் நமக்குள்ளிருந்து செயல்படும் அவரது ஆற்றல் மீது நம்பிக்கை வைப்போம். என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன் என்ற மனத்துணிவை தூய ஆவியானவரிடம் பெறுவோம் பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேருடைய என்ற ஆண்டவரின் வார்த்தைக்குச் சீடர்களைப் போலச் சான்று பகர்வோம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

**நற்செய்திப் பணிக்குழுவின்**
**இணைய தளம்** www.arulchandrunilayam.org

# உண்மையான கடவுள் யார்?

இயேசு கிறிஸ்துவே கடவுள், அவர் 2000 ஆண்டுகளுக்கு முன் பெத்லகேமில் மனிதனாகப் பிறந்து, பின் இறைவனாக மாறிய ஒருவரல்ல. இவர் பெத்லகேமில் பிறப்பதற்கு முன்பே இருக்கின்ற இறைவனே மனிதனாக அவதரித்தார். மூவொரு கடவுளில் ஒருவர். அவர் வார்த்தையாக இருந்த கடவுள்(யோவா 1:1,2). இவரே எல்லாவற்றிற்கும் மேலான கடவுள். ஏன்றென்றும் போற்றுதற்குரியவர், இவரைப் ஆண்டவர் என்றும் கடவுள் என்றும் (யோவா 20:28), இறைவன் என்றும், தந்தை என்றும் (எசா9:6) பல இடங்களில் யாவே இறைவன் என்றும் குறிப்பட்டுள்ளதை நாம் காணலாம் (ஏரே23-5,6). இவர் கடவுளோடு கடவுளாய் இருந்தவர். உலகம் அனைத்தும் அவர் வழியாக அவருக்காகப் படைக்கப்பட்டன. அனைத்துக்கும் முந்தியவர் அவரே (கொலோ 1:16,17). யோவானைவிட பெரியவர் (மத் 12:41) சாலமோனைவிட பெரியவர் (மத்12:42), ஆபிரகாமைவிட பெரியவர் (யோவா8:58) தூயவர், கபடற்றவர், மாசற்றவர், பாவிகளிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு வானங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவர் (எபி7:26). ஆகார், ஆபிரகாம், யாக்கோபு. யோசுவா, எசாயா, தானியேல் இன்னும் பல பழைய ஏற்பாட்டு மாந்தர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தியவர். மோசேயிடம் “இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே” என்று சொன்னவர் (விப3:14), புதிய ஏற்பாட்டில் யோவான் நற்செய்தியில் 7முறை (6:35; 8:12, 10:9, 11:25; 15:1, 14:6) ‘இருக்கின்றவர் நானே’ என்பதே வெளிப்படுத்தி, இருக்கின்றவர் நானே என்பதை நீங்கள் நம்பாவிடில் பாவிகளாகச் சாவீர்கள் என்றார் (யோவா8:24). வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை என்று சொல்லித் தன்னை தந்தையோடு இணைத்துக் கொள்கிறார். இயேசு ஆண்டவர்தான். கடவுளுக்குச் சமமானவர். ஆகையால்தான், பிலிப்பு, இயேசுவிடம் ஆண்டவரே! தந்தையை எங்களுக்குக் காட்டும் என்று கேட்டபோது, அவரிடம் என்னை காண்பது தந்தையைக் காண்பது ஆகும். நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார் (யோவா 14:7-11) என்றும், என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்ற நான் விண்ணிலிருந்து இறங்கி வந்தேன் (யோவா6:38) என்றும் கூறுகிறார்.

**கடவுள் ஏன் மனிதனாக பிறக்க வேண்டும்?** அவரது அவதார நோக்கம் என்ன? அற்புதம் செய்யவா? உண்டாகட்டும் என்ற வார்த்தை போதுமே! அவை உண்டாக, நோய்களை குணமாக்கவா?- இறந்தவர்களையும் உயிரோடு எழுப்பின அவரது இறைவாக்கினர்கள் போதுமே! குணமாக்க.! போதனைகள் வழங்கவா?-- வானத்திலிருந்தபடியே தனது தூதர்கள் மூலம் வழங்கியிருக்க முடியுமே! பின்னர் ஏன் வந்தார்?... வந்த நோக்கம்தான் என்ன? மிக மிக முக்கியமான நோக்கம், உண்டாகட்டும் ! என்ற வார்த்தையால் உண்டாக்க முடியாத! வானத்திலிருந்து கட்டளையிட்டு நல்வழிப்படுத்தினாலும் செய்ய முடியாத! இறைவாக்கினர்களையும் இறைதூதர்களையும் கொண்டு நிறைவேற்ற முடியாத ஒன்றை செய்து தீர்க்க வந்தார். இதுவரை செய்யாத! இனி செய்ய முடியாத ஒரு மாபெரும் செயலைச் செய்து முடிக்க வந்தார். உலகத்தின் பாவங்களுக்கு விலையாக, மனிதகுலம் பெற வேண்டிய தண்டனைக்கு ஈடாக தம் உயிரையே கொடுக்க வந்தார். பாவத்தில் வீழ்ந்த இறைதூதர்களை இறைநீதியின்படி தண்டித்த கடவுள் பாவத்தில் வீழ்ந்த மனிதனை தண்டிக்க முடியவில்லை. இறை அன்பு தடுத்தது. அன்பு கைவிடவில்லை. இதனால், இறைநீதிக்கும், இறையன்புக்கும் போராட்டம் நிகழ்ந்தது. இறைநீதி நிறைவேற வேண்டும். இறையன்பு செயல்பட வேண்டும். ஆனால், பாவத்திற்குப் பரிகாரம் செய்ய போதுமானது எதுவும் இவ்வுலகில் இல்லை. ஏனெனில், எல்லோரும் ஒருமிக்க கெட்டுப்போயினர் (உரோ 3:12). பாவமற்ற பலி எங்கே? என்று உலகில்

ஒலித்துக்கொண்டிருந்த குரலுக்கு பதில் கடவுளிடமிருந்தே வந்தது. 'உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன்' (எபி 10:9) என்று கடவுளின் வாக்கு வெளிப்பட்டது. பாவிகளை மீக்க போதுமானதும், அதற்கு அதிகமானதுமான தூய்மை அவருக்கு இருந்தது. ஆகையால், வாக்கு மனுவுருவாகி (யோவா 1:14) தம்மையே மாசற்ற பலியாகக் கொடுத்து, பாவங்களைப் போக்குவதற்காக ஒரே முறை உலகில் வெளிப்படுத்தப்பட்டார் (எபி9:26). அவரது ஞானக்கடலில் உதித்த ஞானக் கதிரவன்தான் இயேசு கிறிஸ்து. கடவுள் செய்த எல்லா செயல்களிலும் மிகவும்...மி..க..வு..ம் கடினமான செயல், இந்த பாவத்திற்கான பலியாகுதலே. நாம் கிறிஸ்து வழியாக தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார் (2கொரி5:21). கடவுள் வடிவில் விளங்கிய அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி2:6-7).

இயேசு கடவுள் என்றால் சிலுவையில் உயிர் விடும்போது என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கூறுவது ஏன்?(மாற்கு 15:34) என்ற கேள்வி எழலாம்? பாவத்தின் சம்பளம் மரணம். ஆகவே, நீதியான கடவுள் மனிக்குலத்தின் பாவத்தைப் போக்க மனிதனாக வெளிப்பட்டதால்(1திமோ3:16) அவர் உயிர் பிரியும் வேளையில் மனுக்குலத்தின் ஒட்டுமொத்த பாவமும் அவர் மேல் இறங்கியது. ஆகவே, பாவமே அறியாத தந்தையின் தொடர்பு அந்த வேளையில் துண்டிக்கப்பட்டது (1பேது2:24) நம்மை கடவுளுக்கு ஏற்புடையோராக்க நமது பிரதிநிதியாகவே இவ்வாறு கூறுகிறார் (2கொரி5:21). கடவுள் இயேசுவுக்குச் சொந்த தந்தை, அவரது கட்புலனாகாத சாயல் (கொலோ1:15) உயிர் கொடுத்தவரின் உயிரை எடுக்க முடியுமா? அவர் படைக்கப்பட்டவர் அல்ல. அவரே படைத்தவர், அவரே கடவுள்.

**கடவுளின் வார்த்தையே உண்மை:**

எவருக்கும் தெரிந்திராத பெயர் ஒன்று கிறிஸ்துவின் மீது எழுதப்பட்டிருந்தது. 'கடவுளின் வாக்கு என்பது அவரது பெயர் (திவெ19:12,13). வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார்(யோவா 1:1,2). அவர் அருளும் உண்மையும் நிறைந்தவராய் கடவுளின் மாட்சியைப் பெற்றிருந்தார் (யோவா 1:14) என்று யோவான் கூறுகிறார் இதைக் குறித்து உண்மையே உமது வார்த்தையின் உட்பொருள் (திபா 119:160) என்று தாவீது பாடுகிறார். இயேசு கிறிஸ்துவே நற்செய்தியின் உண்மை என்றும் (கலா2:5), அவருடைய போதனைகள் உண்மையானவை என்றும் (2திமோ3:7,4:4) தூய பவுல் குறிப்பிட்டுள்ளார். ஆக. கடவுளின் வார்த்தையே உண்மையாகும் (யோவா17:17). வார்த்தையான கடவுள் மனுக்குலத்தை மீட்க தன்னைத் தாழ்த்தி கொண்டதால் அவர்(சுதன்) 'இறைமகன்' இவரே உண்மையான கடவுள்(1 யோவா5:20). வாக்கு கடவுளாய் இருந்தது என்பதை யூதர்கள் பொய் மூட்டை என்றனர். வாக்கு மனிதரானார் என்பதை கிரேக்கர் பைத்தியக்காரதனம் என்றனர். யோவானோ அதை இறைஞானம் என்கிறார். யூதருக்கு இடரலாகவும், கிரேக்கருக்கு பைத்தியமாகவும் தெரிந்த கிறிஸ்து. நம் வாழ்வில் ஆண்டவரும் மீட்பருமாக இருக்கின்றாரா?. உண்மையான ஒரே கடவுளையும் அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு (யோவா 17:3). இயேசுவின் வார்த்தையே உண்மை (யோவா:17:17) அவரே உண்மை (யோவா 14:6) அவரை தம் முன் நிறுத்திக் கொண்டு 'நீ அரசன் தானோ?' என்று பிலாத்து கேட்டான். அதற்கு இயேசு, 'அரசன் என்று நீர் சொல்கிறீர், உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே நான் பிறந்தேன்: இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்' என்றார். பிலாத்து அவரிடம் "உண்மையா? அது என்ன?' என்று கேட்டான் (யோவா 18:37,38). பிலாத்து அன்று இயேசுவிடம் கேட்ட கேள்வி இன்று அனேகரை உண்மையை அறிந்து கொள்ளும் ஆர்வத்தை தூண்டியிருக்கிறது.

நாம், உண்மையை அறிந்தவர்களாய் இருந்தால் உண்மை விடுதலை அளிக்கும் (யோவா8:32). ஏனெனில், மனித குலத்தின் பாவங்களை ஏற்றுக் கொண்டு அதற்கான தண்டனையை அடைந்து, இரத்தம் சிந்தி, உயிரையும் கொடுத்து, உயிர்த்தெழுந்த இயேசுவைத் தவிர வேறு எவராலும் விடுதலை இல்லை(திப4:12). ஆகவே, அவருடைய அளவற்ற அன்பையும். தீர்ந்துபோகாத இரக்கத்தையும் அறிந்து, அவருடைய மன்னிப்பைப் புரிந்து, அவரை நம்பிக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்(யோவா 1:12). உண்மையை அறிந்து கொண்ட ஒவ்வொருவரும் அவற்றை எடுத்துரைப்பதில் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும் (2கொரி4:2). கடவுளின் முன் ஏற்புடையோராக நிற்க முழு முயற்சி செய்து உண்மையின் வார்த்தையை நேர்மையாகப் பகுத்துக் கூறும் பணியாளராக நாம் செயல்பட வேண்டும் (2திமோ2:15).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்' (எபே6:16).

ஒவ்வொரு மனிதனின் வளமான, மகிழ்ச்சியான, அமைதியான, மன நிறைவான, நிம்மதியான வாழ்க்கைக்கு (இப்படி நிறைய நன்மைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்) வழிகாட்டியாக அவனுக்கு முன்னே செல்வது 'நம்பிக்கை' என்ற ஒற்றைச் சொல்லின் வாழ்க்கை அனுபவம் தான். வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையின் இரகசியமே இந்த நம்பிக்கை என்ற ஒற்றைச் சொல்லில்தான் ஒளிந்திருக்கிறது. நம்முடைய சிறு வயது நாட்களில் எல்லாருடைய வீட்டிலும் கைவிளக்கு என்று சொல்லக்கூடிய டார்ச்லைட் வைத்திருப்பார்கள். இரவு நேரங்களில் வெளியில் சென்றால் பாதுகாப்பாய்ச் சென்று வரப் பயன்படுத்துவார்கள். அதுபோல நாம் பாதுகாப்பாய் இவ்வுலகில் பயணிக்க உதவும் டார்ச்லைட் தான் நம்பிக்கை.

இவ்வுலக வாழ்வின் சிறப்புக்கும், மேலுலக வாழ்வுக்கான உறுதிக்கும் நமக்கு துணையாக இருப்பது நம்பிக்கைதான். 'நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை' (எபி 11:1). உலக வாழ்வில் நாம் எதையெல்லாம் சாதனையாக்க விரும்புகின்றோமோ அதனை அடைவதற்கு நம்பிக்கைதான் உதவி செய்யும். நம் கண்ணுக்கு புலப்படாத மறைந்திருக்கும் வெற்றிக்கு நம்மை வழி நடத்துவது நமது நம்பிக்கை தான். நாம் எதிர்பார்த்திருப்பது நடக்குமா? நடக்காதா? நாம் செபிப்பது கிடைக்குமா? கிடைக்காதா? என்ற இருமனம் கொள்வதற்குக் காரணம் நமது நம்பிக்கையின்மையே.

'நம்பிக்கையோடு ஐயப்பாடின்றிக் கேட்க வேண்டும். ஐயப்பாடு கொள்பவர்கள் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போன்றவர்கள். இத்தகைய இருமனமுள்ள நிலையற்ற போக்குடையவர்கள் ஆண்டவரிடம் ஏதாவது பெற முடியும் என நினைக்காதிருக்கட்டும்' (யாக்:1:6-8). நான் செபிக்கும் போது மட்டுமல்ல எல்லாச் சூழ்நிலையிலும் இறை நம்பிக்கையோடு செயல்பட வேண்டும். ஐயப்பாடு கொண்டவர்கள் அதாவது அவநம்பிக்கையுள்ளவர்கள் காற்றினால் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போன்றவர்கள். அது நிலையில்லாமல் கரையை நோக்கி வருவதும், கடலுக்குள் போவதுமாக இருப்பது போல நம்பிக்கையற்றவர்களும் செபம் செய்து கொண்டும், உலகப் போக்கிலும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

சிறு குழந்தைகள் உள்ளே வெளியே என்று விளையாட்டு விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். நம்பிக்கையற்றவர்களும் குழந்தைகளைப் போல வாழ்க்கையையே உள்ளே வெளியே என்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இதற்கு கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல பணியாளர்களாகிய நாமும் விதிவிலக்கல்ல. நம்பிக்கை இருப்பது போல் இறை வேண்டல் செய்து கொண்டு நடக்கும் என்ற உறுதியற்று, நன்றியுணர்வு இல்லாதவர்களைப் பார்த்துத்தான் புனித யாக்கோபு இருமனமுள்ளவர்கள் என்கிறார். இருமனம் உள்ளவர்களை நிலையற்றவர்கள். அதாவது மாறிக்கொண்டே இருப்பவர்கள் என்று கூறுகின்றார். அத்தகைய இருமனம் உள்ளவர்கள் எவரும் கடவுளிடமிருந்து எதையும் பெற முடியும் என்று நினைத்துக் கூடப் பார்க்க வேண்டாம் என்றும் கூறுகிறார்.

'நம்பிக்கை: என்ற ஒற்றைச் சொல் நலம் அளிக்கும் மருந்து. வாழ்க்கையின் விளிம்பு நிலைக்குச் சென்றவர்களைக் கூட மேலே ஏற்றிவிடும் ஏணி. நாம் கொண்டிருக்கும் இறை நம்பிக்கை நம் வாழ்வில் எண்ணிப் பார்க்க முடியாத காரியங்களைக் கூட நமக்குள் நிகழ்த்திக் காட்டும் மந்திரச்சொல்.'என் கடவுள் கிறிஸ்து இயேசுவின் வழியாய் தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு உங்கள் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்வார்' (பிலி4:19). இது புனித பவுலின் வாழ்க்கை அனுபவம். நம் தந்தைக் கடவுள் நம் மீது அக்கறை உள்ளவர். எனவே, கிறிஸ்து இயேசுவின் வழியாய் தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு நமக்கு இவ்வுலக வாழ்வுக்கான தேவைகளையும், ஆன்மீக வாழ்வுக்கான தேவைகளையும் கண்டிப்பாக நிறைவு செய்வார். இரண்டிலுமே என் வாழ்க்கை அனுபவங்கள் பலவற்றை நான் சான்றாகக் கூற முடியும்.

நான் கடவுள் பார்வையில் இருக்கின்றேன். அவர் நான் சொல்லாமலே என் வாழ்க்கைச் சூழலை, நான் சந்திக்கின்ற பிரச்சனைகளை, சவால்களை, போராட்டங்களை, நான் அனுபவிக்கின்ற துன்ப துயரங்களை, பொருளாதாரத் தேவைகளை, ஆன்மீகக் குறைபாடுகளைக் காண்கிறவராய் இருக்கின்றார் என்பதை நம்ப வேண்டும். நம்மைக் கண்டும் காணாதது போல் கடந்து போகிறவர் அல்ல நம் கடவுள். இவை அனைத்திலிருந்தும் நம்மை விடுவித்து தப்புவித்து வாழ வைக்க வல்லவர் நம் கடவுள் என்ற ஐயப்பாடு இல்லா உறுதியான மனநிலை நமக்கு வேண்டும். எனென்றால், நம் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பதும் விரும்புவதும் நாம் அவர் மீது கொள்ளும் நம்பிக்கையைத்தான்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த போது நீ நம்பியபடியே உனக்கு ஆகட்டும் என்று சொல்லி விடுதலை கொடுத்தவர். இன்று நம்மையும் பார்த்து நீ நம்புகிறபடியே உனக்கு ஆகட்டும் என்று ஆசி வழங்குகின்றார். அவரை நம்புவோம். நலமாய், வளமாய் வாழ்வோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

---

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

எவ்வளவு வைத்திருக்கிறோம் என்பதில் அல்ல....

**நம் வாழ்வு.....**


எவ்வளவு மகிழ்ச்சியோடு வாழ்கிறோம் என்பதில் தானே இருக்கிறது.

-எல்லாரோ

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

... மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது ' (லூக்கா 12:15)

**ஜூன்** மாத நற்செய்திப் பணியாளர் மடலில் மட்டுமே பதில்கள் உள்ளன.




**இடமிருந்து வலம்**

2. மனிதர் செய்யும் எவை அவருக்கு கணையாழி போல் திகழ்கின்றன
4. எவை வானத்திலிருந்து இறங்கி வருகின்றன
7. எது தந்தையிடமிருந்து வருவன அல்ல
9. புனித தாமஸ் மூர் எழுதிய புத்தகம் எது?
10. எருசலேமுக்கு அருகில் உள்ள பென் இன்னோம் பள்ளத்தாக்கிலிருக்கும் ஓர் இடம்
11. மனாசே அரசனான போது அவனுக்கு வயது என்ன?
13. நாம் கடவுளின் என்பதை உணர்வோம்
14. ஆண்டவர் யாரிடமிருந்து மீட்பு வருகிறது என்று கூறினார்?
15. இப்படிப்பட்ட விண்ணிலிருந்து வந்தவை அல்ல

**மேலிருந்து கீழ்**

1. தூய ஆவியாரைத் திருமுழுக்கின் போது பெற்றுக்கொண்டு எதன் வழியாக அவரது அருள் பொழிவைப் பெற்றோம்?
3. அன்னைமரியாவின் அர்ப்பணிப்பு கடவுளின் திருவுளத்திற்கு முழுமையான ஆகும்
5. கிரேக்க மொழிபெயர்ப்பில் தெற்கு நோக்கி என்பதற்கு பொருள்
6. நலிந்து போனவர்களை ஊக்குவித்து உயிரோட்டமாக வைத்திருப்பது எது?
8. யார் கீழ்படிந்து ஆண்டவருக்கு செவிமடுத்ததால் அமைச்சர் ஒருவர் திருமுழுக்கு பெற்றார்?
12. நபர் சொல்வதையும் செய்வதையும் உற்றுநோக்குதல் எது?

**போட்டி விதிமுறைகள்**

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்
2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு போன மாத பணியாளர் இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் வார்த்தை இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்
3. விடை குறித்து சகோதரரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/-. நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் ஒரு நபருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்.

சென்ற மாத போட்டியில் கலந்து கொண்டவர்கள் 17 பேர். சரியான விடை எழுதியோர்: நற்பணி அலங்கார மேரி, தைனஸ், ஏஞ்சல் நிர்மாலா, **இராம்நகர்.** நற்பணி மரியகிரகோரி, **ஓ.சிறுவயல்.** நற்பணி ஆரோக்கிய ரோசன், லூவனா செபஸ்தியான். **தங்கச்சிமடம்,** நற்பணி லில்லி கிளாராமேரி, **இடைக்காட்டூர்.** மெர்லின் ஆரோ, விஜய் ஆனந்த், **பாம்பன்.** நற்பணி கரோலின் எமிலி, **பரமக்குடி.** நற்பணி ஆரோக்கியசாமி, **செக்காலை.**

**குலுக்கல் மூலம் பரிசு பெறுபவர்: நற்பணி** M. **தைனஸ்.** இராம்நகர்

*அனைவருக்கும் வாழ்த்துகள்.*

# திருவிவிலியமும் திருக்குறளும்

கானான் நாட்டில் வாழ்ந்த யாக்கோபிற்கு முதிர்ந்த வயதில் பிறந்தவன் யோசேப்பு. அழகிய தோற்றமுடைய 17 வயது மகனை, அவர் மிகுந்த அன்பு செய்ததாலும், யோசேப்பு கனவின் மன்னனாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டதாலும் தன் உடன் பிறந்த சகோதரர்கள் அவரைக் கொல்ல திட்டமிட்டனர்.

ஆனால் யோசேப்பு அங்கிருந்து வணிகர்கள் மூலம் எகிப்து நாட்டில் அடிமையாக விற்கப்பட்டார். அங்கே எகிப்து நாட்டின் மன்னனாக பார்வோன் கண்ட கனவுகளுக்கு தெளிவான விளக்கம் அளித்து, அரசனின் அன்பை பெற்று, எகிப்து நாட்டின் ஆளுநராக உயர்ந்தார். எல்லாவற்றிலும் ஆண்டவர் யோசேப்புடன் இருந்து அவர் தொட்ட காரியம் அனைத்தையும் துலங்கச் செய்து ஆசீர் வழங்கினார்.

பஞ்சத்தால் தானியம் வாங்க எகிப்திற்கு வந்த தன் சகோதரர்களைக் கண்டு, கண்ணீர் மல்க அவர்களை அரவணைத்து, அவர்கள் வெட்கப்படும்படி வேண்டிய உணவுப் பொருட்களை கொடுத்தும் அனைத்து உதவிகளைச் செய்ததோடு தன் தந்தை யாக்கோபையும் வரவழைத்து மிகுந்த அன்புடன் ஒரே குடும்பமாக இணைத்தான்.

மேற்கண்ட நிகழ்விற்கு இசைவாக திருவள்ளுவர் தனது இன்னா செய்யாமை என்ற அதிகாரத்தில் 314 வது குறளில்

> இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல். என்கிறார்.

தமக்குத் தீங்கு செய்பவரைத் தண்டிப்பதற்கு சரியான வழி, அவர் வெட்கித்தலை குனியும்படி அவருக்கு நன்மை செய்து விடுவது தான்.

எனவே, நாமும் பிறரன்புப்பணியாக, நம் பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள் மற்றும் நம் பகைவர்களை உளமாற அன்பு செய்து அவர்களின் தேவைகளில் உதவிக்கரம் நீட்டி, கடவுள் வழங்கும் நமக்கு அளிக்கும் ஆசிரைப் பெள்றுக்கொள்வோம்.

- நற்பணி **முத்து ஜூலியானா**, இராம் நகர்.

நீங்கள் நம்பிக்கையில் நிலைத்திருக்கிறீர்களா? என உங்களையே சோதித்துப் பாருங்கள். உங்கள் நடத்தையைச் சீர்தூக்கிப் பாருங்கள் (2 கொரி 13:5).

நான் நம்பிக்கையில் நிலைத்திருக்கிறேனா? என்று நான் என்னைக் கேட்கத் தூண்டிய வார்த்தைகள் இவை. பலநேரங்களில் தீயோனின் தீக்கணைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அணு ஆயுதம் போல வாழ்க்கையின்மீது விழும்போது சற்று ஆடித்தான் போகிறேன். அந்த நேரங்களில் என் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. ஆனால், சீர்தூக்கிப்பார்க்கும் போது நான் செல்லவிருக்கும் வழிக்கு என்னைத் திரும்பக் கொண்டுவருகிறது. தாக்குதலில் காயமுற்ற பகுதிகளுக்கு இறைவார்த்தை மருந்தாகிறது.

இறைவா! நீர் என் உள்ளத்தை ஆய்ந்து அறியும்; என் எண்ணங்களை அறியுமாறு என்னைச் சோதித்துப் பாரும். உம்மை வருத்தும் வழியில் நான் செல்கின்றேனோ? என்று பாரும்; என்றுமுள வழியில் என்னை நடத்தியருளும் (திபா 23) என்று தாவீது போல அவரை நோக்கிக் கூக்குரலிட்டு அவரது உதவிக்காக ஏங்கித்தான் நிற்கிறேன். எப்போதும் அப்படியே இருப்பதில்லை. நண்பர்களின் பிற்போக்கும் அதை ஏற்றுக்கொள்ளும் குழுக்களையும் காணும்போது மனம் தடுமாறத்தான் செய்கிறது. அப்பொழுது என்னை நோக்கி என் மனது எழுப்பிய கேள்விகள்

- நான் கடவுளை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு செய்கிறேனா? (இ ச 6:5)
- மற்றவர்களிடம் அன்பு, இரக்கம் மற்றும் மன்னிப்பு காட்டுகிறேனா? (எபே 4:32)
- என் வார்த்தைகளும் செயல்களும் கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றனவா? (1 பேதுரு 2:21)
- என்னில் நான் செய்த தவறுகளை ஒப்புக்கொண்டு மனந்திரும்புகிறேனா? (திபா 51:10)

இந்த கேள்விகள் என்னைத் துளைத்தெடுத்தன. சில சமயம் என்னைக் கேலி செய்தன. ஒவ்வொருமுறை தவறும்போதும் கணினி விளையாட்டில் தோல்வியடைந்தவர்கள் மீண்டும் தொடக்கத்தில் இருந்து ஆரம்பிப்பது போல ஆரம்பிக்கிறேன். இதில் சிறுபிள்ளையிடம் இருக்கும் ஆர்வம் என்னில் உள்ளது. எத்தனைமுறை தீயோன் என்னை வென்றாலும் நான் தோல்வியை ஒப்புக்கொள்வதில்லை. மீண்டும் அவனை எதிர்க்கத் தொடக்கத்திலிருந்து முயற்சிக்கிறேன். வாழ்க்கை இழுத்துக்கொண்டு போகும் திசையில் நான் செல்லாமல் என் கடவுள் காட்டிய திசையில் செல்லவே முயற்சிக்கிறேன் ஏனென்றால் எனது ஆன்மா உயிரோடு இருக்கிறது. மீன் எப்போதும் தண்ணீர் செல்லும் பாதையில் செல்வதில்லை எதிர்திசையிலேயே செல்லும். தண்ணீர் செல்லும் திசையில் செல்லும் மீன் செத்ததே. என் ஆன்மா ஒவ்வொரு நாளும் . 'நம் வழிகளை ஆய்ந்தறிவோம்! ஆண்டவரிடம் திரும்புவோம் (புல 3:40) என்று ஆண்டவரிடம் திரும்ப முயற்சி செய்கிறது. எனது ஆன்மா வளர்ச்சியை எனக்கு கற்றுக்கொடுக்க ஒரு துணையாளரை இயேசு எனக்குள் கொடுத்துள்ளார். அவர் என்னில் உள்ளாரா? என்று சோதித்துப்பார்க்கிறேன். தூய ஆவியாரின் கனிகள் அதற்கு அளவுகோலாக இருக்கிறது; 'தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும் (கலா 5:22,23). இந்த அளவுகோல் எப்பொழுதும் என்னை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. கனிகளைக் கொடுத்தால்தான் அவரிடம் இருந்து கொடையை பெறமுடியும் என்பது எனக்கு

தெரியும் முடிந்த அளவு முயற்சி செய்கிறேன். இருந்த போதும் தேங்காய்க்குள் கைவிட்டு அதை எடுக்க முடியாத குரங்குபோல் நான் உள்ளேன். உலகை எளிதில் விட்டுவிடமுடிவதில்லை. ஒவ்வொன்றாக ஒவ்வொரு காலகட்டத்தில் வெற்றி பெற்றுவருகிறேன். முழுவெற்றி எப்பொழுது என்று தெரியவில்லை. இலக்கு ஒன்றே, அது அவர் காட்டியது. 'அவரோடு இணைந்திருப்பதாகக் கூறுவோர் அவர் வாழ்ந்தவாறே வாழக் கடமைப்பட்டவர் (1 யோவான் 2:6). கடமையில் தவறுகிறேனா? என்று என்னை ஆய்ந்து பார்க்கிறேன். 'எனவே, ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும் (1கொரி 11:28). அப்பத்தை உண்ணும் போதெல்லாம் உள்ளம் குத்தப்படுகிறது. ஆனால் என்னைக் குற்றவாளியாக ஆக்காமல், இயேசுவின் சாயலுக்கு நாளுக்கு நாள் மாறிக்கொண்டு, கடவுளோடு நெருக்கமான உறவில் வளர உதவுகிறது.
எங்கள் பாவங்களின் பளுவை எங்களால் தாங்கமுடியவில்லை; ஆனால் நீர் எங்கள் குற்றப் பழிகளைப் போக்குகின்றீர் (திபா 65:3). அவர் எல்லாப் பாவங்களையும் போக்கி என் சுமையை ஏற்றுக்கொள்கிறார், 'கடவுளே! நீரே என் இறைவன்! உம்மையே நான் நாடுகின்றேன்; என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது; நீரின்றி வறண்ட தரிசு நிலம்போல என் உடல் உமக்காக ஏங்குகின்றது.' என்று தாவீது அரசர் கடவுளை நோக்கி ஏங்கியது போல நானும் செபிக்கிறேன். அவரின் வழியை தவறவிடாமல் செல்ல சுய ஆய்வு எனக்கு உதவுகிறது.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

## பாவி முதல் புனிதன் வரை

தலைப்பு தத்துவமோ கவிதையோ அல்ல. மாறாக ஒருவர் எந்த முறையில் இருந்தாலும் கிறிஸ்துவை தன் இதயத்தில் ஏற்றுக் கொண்டு தான் மாறியது மட்டுமல்லாமல் தன்னைப்போல பாவத்தில் இருக்கும் மற்றவர்களை கிறிஸ்துவின் இடத்தில் சேர்க்கும்போது அவர் மனிதனாகாமல் புனிதனாய் மாறுவதை இந்த உலகத்தில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

மகனின் வாழ்க்கை கண்ட தாய் ஒரு நாளோ, இரண்டு நாளோ, ஒரு வாரமோ, ஒரு மாதமோ, இரண்டு மாதமோ அல்ல, மாறாக 17 வருடம் செபித்தால் அந்த செபத்தின் வல்லமை அகுஸ்தினை புனித அகுஸ்தினாய் மாற்றியது. அதன் காரணமாய் எடுத்து வாசி என்ற குரல் அவருக்கு கடவுள் பயத்தை (ஞானத்தின் தொடக்கம்) கொடுத்தது.

களியாட்டம், குடி வெறி, கூடாஒழுக்கம், காம வெறி, சண்டை சச்சரவு ஆகியவற்றைத் தவிர்த்து இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள் (உரோ 13:13) பணியாளர்களாகிய நாம் பல வேளைகளில் அணிந்து கொண்ட இயேசுவின் ஆடையை களைந்து சாத்தானின் ஆடையை அணிந்து கொள்கிறோம் (1யோவா 1:6). நாம் இருளில் இருந்து கொண்டு அவருடன் நட்புறவு உண்டு என்போமானால் நாம் பொய்யராவோம்.

புனித அகுஸ்தினார் தனது பழைய பாவ இயல்பை பத்தோடு பதினொன்றாக

ஒரு கடமைக் கிறிஸ்தவனாய் இல்லாமல் கிறிஸ்துவின் சீடராகத் தன்னை முழுமையாய் அர்ப்பணித்து வாழ்ந்தாரோ அதேபோல நாமும் புனித வாழ்வோம். வெளியில் இருந்து மனிதனை கட்டுப்படுத்துவது எதுவுமில்லை. உள்ளிருந்து வெளியே வருபவையே அவரை கட்டுப்படுத்தும் (கலா 5:18 -21)

எனவே உள்ளத்து அழுக்குகளைக் களைந்துவிட்டு நமது பெருமைக்காக வாழ்ந்து பணி செய்யாமல் உண்மையான கிறிஸ்துவின் சீடர்களாக, நற்செய்திப் பபணியாளர்களாக மாற ஆவியானவர் உதவியை வேண்டுவோம்.

நற்பணி. **அமல்ராஜா,** தேவகோட்டை

## இது சாத்தியமா ?

சமூகத்தை பார்க்கிறேன். ஒரே பொய்யும் புரட்டும் பெருகிப்போய் உள்ளன. மனிதர்கள் பெரும்பாலும் சுயநலவாதிகளாய் மாறிப்போய் இருக்கின்றார்கள்! உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் பெரும் தந்திரக்காரர்களாய் மாறிப்போய் இருக்கின்றார்கள்!சமூகத்தைப் பற்றியோ, சுற்றுப்புறச் சூழலைப்பற்றியோ சிறிதும் அக்கறையில்லை!

இந்த அவலம் சமூகத்தில் மட்டும் தானா? குடும்பங்களிலும் இதையே பார்க்கிறேன். மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார் உறவினர்... என்று எல்லாரிலும் இந்த அவலம் தொடர்கிறது! ஏன் இந்த அவலம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது? இவர்கள் தங்களது பழைய இயல்புகளிலிருந்து மாறப்போவது எப்போது? இறை வார்த்தை நன்கு வாசித்திருந்தும், நல்ல அறநெறிப்பண்புகளில் வளர்க்கப்பட்டிருந்தாலும் இன்னும் இவர்கள் திருந்தவில்லையே! எப்போது மாறப் போகிறார்கள்?

இவ்வாறு முனகிக்கொண்டிருந்த சமயத்தில் தான் லூக்.6:41 ஒரு குத்து குத்தியது. நானே இன்னும் பல பழைய இயல்புகளிலிருந்து மாறாமல் இருக்கிறேனே! எப்படி நான் பிறரைக்குறை கூறுவது?

இந்த ஆற்றல்மிக்க இறைவார்த்தை நம் மனதின் ஆழத்திற்குள் சென்றால், நம் கண்ணில் உள்ள மரக்கட்டையை எடுத்து விட்டு பிறர் கண்ணில் இருக்கும் துரும்பைப்பற்றி யோசிப்பது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

| **வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்** | |
|---|---|
| இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம். | **எபிரேயர்** 10:10 |

# ஜூலை 2026 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.7.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 04.7.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 05.7.26 | சீராய்வு தியானக் கூட்டம் | சாலைகிராமம் வட்டாரம் |
| 05.7.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | காளையார்கோவில், கோட்டைக்காடு, |
| 10-12. 7.26 | ஆண்டுத் தியானம்-I | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 11.7.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம், மாந்தை |
| 12.7.26 | சீராய்வு தியானக் கூட்டம் | இராம்நகர் வட்டாரம் |
| 12.7.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | இராமநாதபுரம், சிவகங்கை, பரமக்குடி ஓரியூர், பட்டுக்கோட்டை, பூதலூர், புதுக்கோட்டை, |
| 18.7.26 | சீராய்வு தியானக் கூட்டம் | தங்கச்சிமடம் வட்டாரம் |
| 18.7.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | மங்களபுரம் |
| 19.7.26 | சீராய்வு தியானக் கூட்டம் | பரமக்குடி வட்டாரம் |
| 19.7.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | காயாவயல், சாயல்குடி. சி.கே. மங்கலம், அம்மாபேட்டை தஞ்சாவூர், மன்னார்குடி |
| 24-26. 7.26 | ஆண்டுத் தியானம்-II | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 25.7.26 | சீராய்வு தியானக் கூட்டம் | ஆர்.எஸ். மங்கலம் |
| 26.7.26 | சீராய்வு தியானக் கூட்டம் | செஞ்சை வட்டாரம் |
| 26.7.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | திருவாரூர், நமணசமுத்திரம் இராஜசிங்க மங்கலம் |

# ஜூலை 2026 சீராய்வு வட்டாரக் கூட்டம்

| நாள் | வட்டாரம் |
|---|---|
| 05.07.2026 | சாலைகிராமம் |
| 12.07.2026 | இராம்நகர் |
| 18.07.2026 | தங்கச்சிமடம் |
| 19.07.2026 | பரமக்குடி |
| 25.07.2026 | ஆர்.எஸ். மங்கலம் |
| 26.07.2026 | செஞ்சை |

## புதிய பணியாளர்கள் பயிற்சி குழு 1,2

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 05.07.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி A. யூஜின் அமலராஜ்<br>நற்பணி P. சகாயராணி |
| 11.07.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி X. லூர்துமேரி |
| 12.07.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி G. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 12.07.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 12.07.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி R. ஆரோக்கியசாமி<br>நற்பணி M. லூயிஜான்போஸ்கோ |
| 19.07.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி கோ. அம்பிகா எலியாஸ்<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி தை. அமல்ராஜா<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 19.07.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி P.அமலோற்பவ ஆரோக்கியராணி<br>நற்பணி X. சகாயலூயிஆரோக்கியசாமி<br>நற்பணி L. ஆரோக்கியசாமி |
| 19.07.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 19.07.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சகாய தமிழ்செல்வி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. ஆரோக்கியசாமி |
| 26.07.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 05.07.26 I | புனித சூசையப்பர் கோவில், கோட்டைக்காடு | நற்பணி M. விசுவாசம் 9442758641<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869 |
| 11.07.26 | திரு இருதய ஆண்டவர் கோவில். மாந்தை | நற்பணி M. விசுவாசம் 9442758641<br>நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 12.07.26 I | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி GMS. ராணி 9150579311<br>நற்பணி G. ஜெனிபர் 9943559317 |
| 12.07.26 II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869<br>நற்பணி A. ஆரோக்கியசாமி (செக்) 9843323439 |
| 12.07.26 II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி S. இராஜேந்திரன் 9865749356 |
| 18.07.26 | லூர்து அன்னை கோவில் மங்களபுரம் | நற்பணி GMS. ராணி 9655264448<br>நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 |
| 19.07.26 III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி 9443157260<br>நற்பணி S. ஹென்றி 9787791869 |
| 19.07.26 III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி S. அந்தோணிபிரகாஷ் 9787791869<br>நற்பணி A. ஆரோக்கியசாமி 9787037717 |
| 19.07.26 III | புனித சூசையப்பர் கோவில். மன்னார்குடி | நற்பணி தை. அமல்ராஜா 9443983519<br>நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் 9655772927 |
| 26.07.26 V | புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம் 9843490206<br>நற்பணி J. இளங்கோ 9942434307 |
| 26.07.26 V | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி V. செங்கோல்மேரி 9345807125<br>நற்பணி P. சகாயராணி 9488024773 |

# புனித போர்த்துக்கல் எலிபெத்



அரகான் நாட்டு அரசரின் அழகிய மகள் எலிசபெத் ஸ்பெயின் நாட்டின் ஸரகோசாவில் கி.பி. 1271 ஆம் ஆண்டு பிறந்தார். குழந்தைப் பருவ முதல், அவள் பக்தியும் செபமும் கலந்த ஒரு தனித்துவம் மிக்க வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவரது பெற்றோர் நலமெனக் கருதியதால் அவர் தமது 12 ஆவது வயதில் போர்த்துக்கல் அரசர் டினிஸ் என்பவரை மணந்து இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

திறமைமிக்க தலைவராகிய டினிஸ் அவரது மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டார். ஆனால் அவர் ஒழுக்கம் மற்றும் பிரமாணிக்கம் இல்லாத கணவராயிருந்தார். இருந்தபோதிலும், எலிசபெத் கணவரை மதிப்புடன் நடத்தி வந்தார். தினமும் திருப்பலியில் பங்கெடுப்பதன் மூலமாகவும், தர்ம செயல்கள் செய்வதன் மூலமாகவும் கடவுளுக்கு உகந்த ஒரு வாழ்க்கை முறையை அவரால் தனக்காக அமைத்துக்கொள்ள முடிந்தது. டினிஸ் அவருக்கு தவறான முறையில் பிறந்த குழந்தைகளைப் படிக்க வைக்க உதவினார். தனது தந்தை, மாற்றாந்தாய் குழந்தைகள் மீது பிரியமாய் இருப்பதைக் கண்டு மகன் அல்போன்ஸா பொறாமை கொண்டு கொதித்தெழுந்தான். எலிசபெத் இவர்களிடையே சமாதானம் செய்ய முயன்றாலும், இருவருக்கும் இடையே வேற்றுமை வளர்ந்து, போர் மூண்டது. அமைதியை ஏற்படுத்தும் இறுதி முயற்சியாக, எலிசபெத் இரண்டு படைகளுக்குமிடையே பயணித்து சமாதானம் செய்து வைத்தார்.

ஞானமும், கரிசனமும் உள்ள பெண்ணாகிய எலிசபெத் அனாதைகள் இல்லம் நிறுவினார். வீடில்லாதவர்க்கு தங்குவதற்கு இருப்பிடம் அமைத்து தந்தார். ஒரு கன்னியர் மடமும் ஏற்படுத்தினார். அவர் கணவர் உடல்நிலை மோசமானபோது அவரை விட்டு நீங்காமல் எலிசபெத் மட்டுமே உடனிருந்து கவனித்து வந்தார். தனது கணவர் மற்ற பெண்களோடு உறவால் எலிசபெத்துக்கு மனவேதனையுடன் இருந்தபோதிலும், பொறுமையுடனும் கனிவுடனும் கவனித்துக் கொண்டார்.௦ மன்னிப்பின் வழியாக, நீங்கள் அமைதியைக் கண்டடைவீர்கள் என்ற வார்த்தைகளுக்கேற்ப தன் கணவனை மன்னித்து அன்பு செய்தார்.

கணவரது பிரிவினால் துயருற்று, தூய பிரான்சிஸ் சபையின் மூன்றாம் நிலை உறுப்பினராக இணைந்து, ஏழைகளுக்கும் நோயுற்றோருக்கும் உதவுவதில் தன்னையே அர்ப்பணித்தார். 12 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது அரசராகியிருந்த அல்போன்ஸோ காஸ்டைல் நாட்டு அரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார். வயதான எலிசபெத் குதிரை மீதேறி படையைத் தொடர்ந்து சென்றார். அமைதி ஏற்பட அவரது முயற்சி வெற்றியளித்தது. இதனால் அவர் நோய்வாய்ப்பட்டு விரைவில் உயிர் நீத்தார். 'நீ அமைதியை விரும்பினால் எல்லாம் நல்லதே நடக்கும்.' இவர் போர்த்துக்கல் புனிதை, அமைதியின் புனிதை, கூடா ஒழுக்கம் உடையோரின் புனிதை.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




ஆலோசனையின் (Counselling) நுண்திறன்களில் ஒன்று - கவனம் செலுத்துதல் (Focusing).

**அறிமுகம்:** ஆலோசனை (Counselling) என்பது ஒரு நபரின் உணர்வுகள்இ சிந்தனைகள்இ பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு அவருக்கு உதவும் ஒரு செயல்முறையாகும். இந்த செயல்முறையில் ஆலோசகர் பயன்படுத்தும் பல நுண்திறன்களில் (Micro Skills) முக்கியமான ஒன்று கவனம் செலுத்துதல் (Focusing) ஆகும்.

ஒரு ஆலோசனை அமர்வில், ஆலோசனை பெறுபவர் (Client) பல விஷயங்களைப் பற்றி பேசலாம். சில நேரங்களில் அவர் தலைப்பிலிருந்து தலைப்பிற்கு மாறிச் செல்லலாம். அப்போது ஆலோசகர் முக்கியமான பிரச்சினை அல்லது உணர்வின் மீது கவனத்தை திருப்பி, அதனை ஆழமாக ஆராய உதவுவதே (Focusing) எனப்படுகிறது.

கவனம் செலுத்துதல் (Focusing)என்றால் என்ன?

கவனம் செலுத்துதல் (Focusing)என்பது ஆலோசனை பெறுபவர் கூறும் பல தகவல்களில் இருந்து முக்கியமான கருத்துஇ உணர்வு, அனுபவம் அல்லது பிரச்சினையை அடையாளம் கண்டு, அதில் தொடர்ந்து கவனம் செலுத்தச் செய்வதற்கான ஆலோசனைத் திறன் ஆகும்.

இது ஆலோசனை அமர்வை தெளிவாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகிறது.

**கவனம் செலுத்துதலின் நோக்கங்கள்.**

- முக்கியமான பிரச்சினையை அடையாளம் காணுதல்.
- உரையாடலை திசைதிருப்பாமல் வைத்திருத்தல்.
- ஆழமான சுயபுரிதலை ஏற்படுத்துதல்.
- உணர்வுகளை தெளிவுபடுத்துதல்.
- தீர்வு காணும் செயல்முறையை எளிதாக்குதல்.

**கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள்**

**1. பிரச்சினை மீது கவனம்**

வாடிக்கையாளர் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கலை மையப்படுத்துதல்.

எடுத்துக்காட்டு: 'நீங்கள் கூறிய பல பிரச்சினைகளில்இ தேர்வு பயம் தான் உங்களை அதிகமாக பாதிக்கிறது போல தெரிகிறது. அதைப் பற்றி மேலும் பேசலாமா?'

**2. உணர்வுகள் மீது கவனம்**

வாடிக்கையாளரின் உணர்வுகளை ஆராய்வது.

எடுத்துக்காட்டு: 'அந்த நிகழ்வை நினைக்கும் போது நீங்கள் மிகவும் வருத்தமாக உணர்கிறீர்கள் போல தெரிகிறது.'

**3. நபர்கள் மீது கவனம்**

வாடிக்கையாளரின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கும் நபர்களைப் பற்றிய கவனம்.

எடுத்துக்காட்டு: 'உங்கள் தந்தையுடனான உறவு இந்த பிரச்சினையில் முக்கிய பங்கு வகிக்கிறதா?'

**4. அனுபவங்கள் மீது கவனம்**

குறிப்பிட்ட அனுபவங்களை விரிவாக ஆராய்தல்.

எடுத்துக்காட்டு: 'அந்த நிகழ்வு நடந்தபோது நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்?'

**கவனம் செலுத்துதலின் முக்கியத்துவம்**

**1. தெளிவை ஏற்படுத்துகிறது**

பல விஷயங்களைப் பற்றி பேசும் வாடிக்கையாளரை முக்கியமான பிரச்சினைக்கு வழிநடத்துகிறது.

**2. நேரத்தை பயனுள்ளதாக பயன்படுத்துகிறது**

ஆலோசனை அமர்வு சிதறாமல் இருக்க உதவுகிறது.

**3. ஆழமான புரிதலை உருவாக்குகிறது**

வாடிக்கையாளர் தனது உணர்வுகளையும் சிந்தனைகளையும் நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது.

**4. பிரச்சினையின் மூல காரணத்தைக் கண்டறிய உதவுகிறது**

மேலோட்டமான தகவல்களைத் தாண்டி அடிப்படை காரணங்களை வெளிக்கொணருகிறது.

- ஆலோசகர் பயன்படுத்தும் கவனம் செலுத்தும் உத்திகள்
- முக்கியமான வார்த்தைகளை மீண்டும் கூறுதல்.
- தெளிவுபடுத்தும் கேள்விகள் கேட்பது.
- உணர்வுகளை பிரதிபலித்தல்.

**சுருக்கிக் கூறுதல்.**

தலைப்பை மீண்டும் மையப்படுத்துதல்.

எடுத்துக்காட்டு: 'இதுவரை நீங்கள் கூறியவற்றை வைத்து பார்க்கும்போது, உங்கள் எதிர்காலம் பற்றிய கவலைதான் முக்கியமானதாக தெரிகிறது.'

**கல்விச் சூழலில் பயன்பாடு**

ஆசிரியர்-ஆலோசகராக செயல்படும் போது:

- மாணவர்களின் கல்விச் சிரமங்களை அடையாளம் காணலாம்.
- தேர்வு பயம்இ நடத்தைப் பிரச்சினைகள், குடும்பச் சிக்கல்கள் போன்றவற்றை புரிந்துகொள்ளலாம்.
- மாணவர்களுக்கு சரியான வழிகாட்டுதலை வழங்கலாம்.
- மாணவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த உதவலாம்.

**எடுத்துக்காட்டு உரையாடல்**

**மாணவர்:** 'எனக்கு படிக்க முடியவில்லை. வீட்டிலும் பிரச்சினை இருக்கிறது. நண்பர்களுடனும் சரியாக பேச முடியவில்லை.'

**ஆலோசகர்:** 'நீங்கள் கூறியவற்றில், வீட்டுப் பிரச்சினை உங்கள் படிப்பை அதிகமாக பாதிக்கிறது போல தெரிகிறது. அதைப் பற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்ல முடியுமா?'

இங்கு ஆலோசகர் (Focusing) திறனைப் பயன்படுத்தி முக்கியமான பிரச்சினையின் மீது கவனத்தை திருப்புகிறார்.

**முடிவுரை**

கவனம் செலுத்துதல் (Focusing) என்பது ஆலோசனையின் மிக முக்கியமான நுண்திறனாகும். இது வாடிக்கையாளர் கூறும் பல தகவல்களில் இருந்து முக்கியமான கருத்துஇ உணர்வு அல்லது பிரச்சினையை அடையாளம் கண்டு, அதனை ஆழமாக ஆராய உதவுகிறது. இதன் மூலம் ஆலோசனை செயல்முறை தெளிவாகவும்இ பயனுள்ளதாகவும், இலக்கை நோக்கியதாகவும் அமைகிறது. ஒரு திறமையான ஆலோசகர், வாடிக்கையாளரின் தேவைகளைப் புரிந்துகொண்டு சரியான இடத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களின் வளர்ச்சிக்கும் பிரச்சினைத் தீர்விற்கும் வழிகாட்டுகிறார்.

**அசை போட அரை நிமிடம் :**

'ஆற்றுபடுத்துனறின் கவனம்
ஆறுதல் தேடுவோர்க்கு தரும் புதிய புவனம் .'

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# இதய அன்பில் நிலைத்திருப்போம்

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்கனை நான் இளைப்பாற்றுவேன். (மத் 11:28) திரு இருதயப் பெருவிழா நவநாள் செபத்தில் என் இதய அன்பில் நிலைத்திருந்தால் எல்லா நன்மைகளும் பெறுவீர்கள் என்று செபிக்கிறோம். இதய அன்பில் நிலைத்திருத்தல் என்றால் என்ன?

இயேசு புனித மார்க்கரேட் மரியாவிற்கு ஒரு காட்சி வழியாக தனது திறந்த இயத்தைக் காட்டினார். அந்த இதயம் காயங்களாலும், அவமானங்களாலும், நிந்தைகளாலும் நிரம்பி இருந்தன. அப்போது இயேசு மரியாவிடம் எனக்குப்பதிலன்பு காட்டி என் இதய அன்பில் நிலைத்திருக்க மாட்டாயா? என்று அழைத்தார்.

இதய அன்பில் நிலைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

நமது இதயத்தை அவருக்காகத் திறந்து வைத்து ஆவலுடன் காத்திருக்க வேண்டும் (2 கொரி 6:13)

தீமையால் நமது இதயங்கள் கடினப்பட்டுவிடாமல் காத்துக் கொள்ளவேண்டும். (எபி 3:18)

எல்லோரிடமும் இயேசுவைப்போல அன்பு காட்ட வேண்டும் (மாற் 12:33)

அவரது இதய அன்பில் நிலைத்திருந்தால் நமது இதயம் அவரது இதயமாகும். அப்போது இயேசுவின் இதயத்தை அழுத்தும் காயங்கள், அவமானங்கள் மறைந்து மாட்சிமிகு இதயமாகிவிடும்.

நற்பணி M. **லூயிஸ்ஜான் போஸ்கோ**

## என்னை மன்னியும்

✹ ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும், பேசுவதிலும் சினம் கொள்வதிலும் தாமதமும் காட்ட வேண்டும் என்ற வார்த்தையின் அழைப்பை மறந்து மற்றவர்கள் கூறுவதைக் கவனமுடன் கேட்க மனமின்ற பதில் கூறுவதில் வேகம் காட்டி உறவுச்சிக்கலுக்கு வழிவகுத்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னிக்கவும் (யாக் 1: 19).

✹ இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து, உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்; அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள் என்ற எச்சரிக்கையை மறந்து பல தியான உரைகள், இறைச்செய்திகளைக் கேட்டும் மனமாற்றமில்லா வாழ்வு வாழ்வதை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னிக்கவும் (யாக் 1:22).

✹ இயேசு கிறிஸ்துவினிடம் நம்பிக்கை கொண்டுள்ள நீங்கள் ஆள்பார்த்துச் செயல்படாதீர்கள் என்ற அறிவுரையை மறந்து பிறரின் பணம், பதவி, சமூக அந்தஸ்து, சாதி பார்த்து உறவு கொண்டாடியதற்காக இறைவா! என்னை மன்னிக்கவும். (யாக் 2:1)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- ⊙ மனித உயிர் கடவுளின் கொடை என்று உணர்ந்து அதை மதிக்கவும், அதன் மாண்பைக் காக்கவும்.
- ⊙ உணவு மற்றும் மருத்துவத் துறைகள் மனித உயிரின் மேன்மையைக் காக்கத் துணிவுடன் செயலாற்ற
- ⊙ போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்படும் மக்களின் உயிர் அதிக அக்கறையுடன் பாதுகாக்கப்பட
- ⊙ உலகில் போர் நடைபெறும் இடங்களில் அமைதி நிலைநாட்டப்பட்டு மக்கள் பாதுகாப்புடன் வாழ
- ⊙ இந்தியாவில் மதச்சார்பின்மையையும், சனநாயகமும் பாதுகாக்கப்படவும், தேர்தல், நீதி மற்றும் ஊடகத் துறைகள் பாரபட்சமின்றி நேர்மையுடன் செயல்பட
- ⊙ ஆண்டுத் தியானங்கள், சீராய்வுக் கூட்டங்கள் பணியாளர்கள் வாழ்வில் புதுப்பித்தலை உருவாக்க

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- வாழ்விலும் பணியிலும் தளர்ச்சியோடுள்ள பணியாளரை இனங்கண்டு ஊக்கப்படுத்தி பணிக்குழுமத்தில் இணைத்தல்

## அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை


அமல அன்னை அமைதியம், காயாவயல்


அருள்சான்று நிலையம், பரமக்குடி


பெருமாள் குரும்பன் பட்டி. சிறப்புப்பணி


புதிய பணியாளர்கள் பயிற்சி - மாந்தை

**புதிய பணியாளர்கள் பயிற்சி**


அமைதியகம்


அம்மாபேட்டை


மங்களபுரம்


தங்கச்சிமடம்

## விண்ணகப்பிறப்பு

சாயல்குடி வட்டாரத்தைச் சார்ந்த **நற்பணி ச.சூசை ஆரோக்கிய தனம்** அவர்கள் 17.06.2026 அன்று விண்ணக பிறப்படைந்தார்கள்.

**அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றி அடையட்டும்.**




*படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?*

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **எபிரேயர் 8-10 அதிகாரங்களுக்குள்**









**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com